செ.வெ.எண்:11/ ஜனவரி / 2019 நாள்:04.01.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற குழந்தைகள் நலக்குழுவிற்கு ஒரு உதவியாளர் உடன் கலந்த தட்டச்சர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பப்படவுள்ளது. தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-------------------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற குழந்தைகள் நலக்குழுவிற்கு ஒரு உதவியாளர் உடன் கலந்த தட்டச்சர் பணியிடம் தொகுப்பூதிய அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பப்பட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**பதவியின் பெயர் மற்றும் தொகுப்பூதியம்**

உதவியாளர் உடன் கலந்த தட்டச்சர் - ஒரு பணியிடம்

**கல்வித்தகுதி**

10ம் வகுப்பு அல்லது 12ம் வகுப்பு தேர்ச்சியுடன் தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சுத் தேர்வில் மேல்நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணினி இயக்குவதில் போதிய பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

மேற்காணும் பணியிடத்திற்கான தகுதியுள்ள நபர்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டப்பட்ட சுயவிவரப்படிவம் மற்றும் மேலொப்பம் இடப்பட்ட கல்விச்சான்றுகளுடன் 19.01.2019 **அன்று மாலை 5.30க்குள்** பதிவு அஞ்சல் மூலம் கண்காணிப்பாளர், அரசினர் கூர்நோக்கு இல்லம், எண்:-34, கீழ் அரண் சாலை, தெப்பக்குளம்(அஞ்சல்) (முருகன் தியேட்டர் அருகில்) திருச்சிராப்பள்ளி - 620 002. (தொலைபேசி எண் 0431-2702234) என்ற முகவரிக்கு அனுப்பிட வேண்டும். குறிப்பிடப்பட்ட காலத்திற்கு மேல் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**